# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2020 ஜனவரி

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாக அவதானிக்கையில் பல பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் குறிப்பிட்ட சில குறைபாடுகளும் காணப்பட்டன. மதிப்பீடு செய்த பரீட்சகர்களின் அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன:

### <u>பகுதி - A</u>

**வினா இல. 01** – 40 புள்ளிகள்

ஒட்டுமொத்த அடிப்படையில் கருத்திற்கொள்ளும்போது, இவ்வினா பாடத்திட்டத்தின் பிரதான பகுதிகளை உள்ளடக்கி மொத்தமாக 40 புள்ளிகளுக்காக வடிவமைக்கப்பட்டிருந்தது. இது அடிப்படை விஞ்ஞானபூர்வ பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் பாடத்திட்டத்தின் கனத்திற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா எளிய வடிவம் ஒன்றின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்தது. வினா இல. 1.1 முதல் 1.10 வரை, தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யும்படியும், வினா இல. 1.11 முதல் 1.15 வரை தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடும்படியும் வினா இல. 1.16 முதல் 1.20 வரை, தரப்பட்ட விடைகளிலிருந்து இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யும்படியும் கேட்கப்பட்டிருந்தன.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளின் விடைகளில் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**<u>பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளில் பொதுவாக அவதானிக்கப்பட்ட ஒரு சில பலவீனங்களும் அவை தொடர்பான கருத்துரைகளும் கீழே காட்டப்பட்டுள்ளன:</u>**

**1.3** இவ்வினா கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி பற்றியதாக இருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

**1.6** இவ்வினா நிதி நிறுவனங்கள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டது. நிதி நிறுவன முறைமை பற்றிய போதியளவு அறிவின்மையால் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.8** இவ்வினா உள்நாட்டு நாணயத்தின் ஓர் அலகுடன் வெளிநாட்டுச் சந்தையொன்றில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவு எவ்வாறு அழைக்கப்படும் என்பதற்கான கலைச்சொல் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், பொருளியல் தொடர்பான கோட்பாட்டு அறிவில் காணப்பட்ட குறைபாடு, பாடப்புத்தகத்தை குறைந்தளே கற்றிருந்தமை போன்றவை காரணமாக சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

**1.9** இவ்வினா பொருளியல் தொடர்பான பொது அறிவினைப் பரீட்சித்தது. இங்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க 2018 ஆம் ஆண்டிற்குரிய இலங்கையின் தலா வருமானம் பற்றித் தெரிந்துவைத்துள்ளனரா என்பதை அறிவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையின் பொருளாதாரத்துடன் தொடர்புடைய புத்தகங்கள் / கட்டுரைகளை வாசிக்காத தால் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இதற்குச் சரியான விடை அளிக்க முடியவில்லை.

இல. 1.11 தொடக்கம் 1.15 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா என குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. அந்த 5 வினாக்களில் வினா இல. 1.11 மற்றும் 1.15 ஆகிய வினாக்களுக்கு தவறான விடைகளே அளிக்கப்பட்டிருந்தன. வினா இல. 1.11 ஆனது வருமானச் சுற்றோட்டப் பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. வினா இல. 1.15 ஆனது எல்லைக் கிரய வளையி மற்றும் சராசரிக் கிரய வளையி ஆகியன மீதான அறிவைப் பரீட்சித்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் மேலுள்ள பகுதிகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவின்மையால் சரியான விடையினை அளித்திருக்கவில்லை.

வினா இல. 1.16 தொடக்கம் 1.20 வரையிலான வினாக்களில் தரப்பட்ட 2 விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யும்படி கேட்கப்பட்டது. வினா இல. 1.17 மற்றும் 1.18 ஆகிய வினாக்களுக்கு அதிகளவான தவறான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. பரீட்சார்த்திகளிடம் பின்வரும் பாட விடயங்கள் பற்றிய சரியான விளக்கம் காணப்படாமை அவதானிக்கப்பட்டது:

- பண நிரம்பல்
- தனியுரிமைப் போட்டி

## <u>பகுதி B</u>

**வினா இல. 02** – 10 புள்ளிகள்

**(a)** **(i)** இவ்வினா பொருளியலின் அடிப்படை எண்ணக்கருவான அரிதானதன்மை எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(ii)** இப்பகுதி, தெரிவு மற்றும் சந்தர்ப்பச்செலவு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விபரிப்பதை எதிர்பார்த்திருந்தது. தெரிவு என்பது பொருட்கள் மற்றும் சேவைகளுக்குத் தேவையான அவற்றின் கேள்வி ஒன்றாகும் என எழுதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அவர்கள் ஒன்றைத் தெரிவுசெய்யும்போது அது பற்றிய எவ்வித விளக்கத்தையும் குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே, சந்தர்ப்பச் செலவு பற்றிய சரியான விளக்கமின்றி விடைகள் அளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(b)** இவ்வினா பொருளாதார முறைமைகள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டி ருந்தது. சில பரீட்சார்த்திகள் சோசலிச பொருளாதார முறைமையின் பண்பியல்புகளை தவறாக விளங்கிக்கொண்டு, கேள்வியும் நிரம்பலும் சமமானது, பொருளாதாரம் விரைவாக அபிவிருத்தி அடைதல் போன்ற தவறான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஒரே விடயத்தை பல வழிகளில் எழுதி குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். எவ்வாறாயினும் சரியாக விடையளித்திருந்த அதிகமான பரிட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**வினா இல. 03** – 10 புள்ளிகள்

**(a) (i)** இவ்வினா கேள்வி மற்றும் நிரம்பல் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் விலையைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தபோதிலும், கணியத்தைத் தவறாகக் கணிப்பிட்டிருந்தனர். இதன் மூலம் சில பரீட்சார்த்திகளிடம் கணிதவியல் பிரசினங்களைத் தீர்ப்பது தொடர்பான அறிவு போதியளவில் காணப்படவில்லை என்பது தெரிகிறது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் விலையையும் கணியத்தையும் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**(ii)** இவ்வினா சமநிலை விலை மற்றும் கணியம் தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், கேள்வி வளையியானது நுகர்வோரின் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்படுவதன் விளைவாக நகர்த்தப்படும் என தவறான முறையில் எழுதியிருந்தனர்.

**(b)** நிறைபோட்டி நிறுவனமொன்றினால் குறுங்காலத்தில் இலாபம் எவ்வாறு உச்சப்படுத்தப்படுகிறது என்பதை விவரிக்குமாறு வினாவில் கேட்கப்பட்டிருந்தது. வெவ்வேறு சந்தைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாக இருந்தமையானது வரைபொன்றை வரைந்து சரியாகக் குறிப்பிடுவதில் தாக்கம் செலுத்தியது. இதன் காரணமாக அவர்களால் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**வினா இல. 04** – 10 புள்ளிகள்

**(a)** இங்கு உச்சபட்ச விலை மற்றும் குறைந்தபட்ச விலை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விபரிக்குமாறு கோரப்பட்டது. இந்த எண்ணக்கரு மீதான தெளிவான விளக்கத்தை கொண்டிராத அதிகளவான பரீட்சார்த்திகள் காணப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரு பதங்களினதும் அர்த்தங்களை மாற்றி எழுதியிருந்தனர். உச்சபட்ச விலையை சமநிலை விலைக்கு மேலுள்ள, அரசாங்கத்தால் விதிக்கப்படும் விலையாகத் தவறானவாறு பொருள் வரையறை செய்திருந்ததுடன் சமநிலை விலைக்குக்கீழ் விதிக்கப்படும், நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான விலையே குறைந்தபட்ச விலை எனவும் குறிப்பிட்டிருந்தனர். எனவே, பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருளியல் பற்றிய போதுமான அளவு கோட்பாட்டு அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள், அரசாங்கப் பாதீடு பற்றிப் பரீட்சிப்பதற்காகத் தரப்பட்ட வினாவுக்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பாதீட்டுக் குறைபாடுகள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிராது விடைகளை வழங்கியதன் காரணமாக முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

**வினா இல. 05** – 10 புள்ளிகள்

**(a) (i)** பணம் தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா வழங்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் பணத்தின் தொழிற்பாடுகளாக பெறுமதியின் சேமிப்பு, பரிமாற்று ஊடகம், பணமானது கணக்கின் பொது அலகு ஒன்றாகத் தொழிற்படுகிறது போன்றவற்றைக் கருதியிருந்தனர். பணத்தின் தொழிற்பாடுகளுக்குப் பதிலாக பணத்தின் பண்பியல்புகளை எழுதிய பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**(ii)** இப்பகுதியானது பொது விலை மட்டத்திற்கும் பணத்தின் பெறுமதிக்கும் இடையிலான தொடர்புடமை பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பொது விலை மட்டமானது பணத்தின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது எனவும் பொது விலை மட்டம், பணத்தின் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையில் மாற்றமடைகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சில பரீட்சார்த்திகள், பொது விலை மட்டமானது பல்வேறு கால இடைவெளிகளில் மாற்றமடைகிறது எனக் குறிப்பிட்டிருந்தனர். பொது விலை மட்டத்திற்கும் பணத்தின் பெறுமதிக்குமிடையிலான தொடர்புடைமை பற்றிய சரியான விளக்கத்தை பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

**(b)** **(i)** குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளிடம் பாதுகாப்புவாத எண்ணக்கரு பற்றிய சரியான விளக்கம் காணப்பட்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கு ஆதாரமாக, பாதுகாப்புவாதமானது ரூபாயின் பெறுமதியை பேணுகிறது என அளிக்கப்பட்ட விடைகள் காணப்படுகின்றன. மேலும் சில பரீட்சார்த்திகள், அமெரிக்க டொலரின்படி ரூபாயின் பெறுமதியைப் பேணுதல் என விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் காப்புறுதியின் அங்கமாக விபரித்திருந்தனர். இது பொருளியலின் தொழினுட்பக் கலைச்சொல் பற்றிய அறிவு காணப்படாததைக் காட்டுகிறது.

**(ii)** குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், பாதுகாப்புவாதத்தின் அனுகூலங்களாக, அதிகளவு எண்ணிக்கையிலான விதிகளும் ஒழுங்குவிதிகளும் காணப்படவில்லை, இது எந்தவொரு காலப்பகுதிக்கும் பொருத்தமானது போன்ற சம்பந்தமற்ற விடயங்களை எழுதியிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** – 20 புள்ளிகள்

**(A)** **(a)** இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் தரரீதியான கட்டுப்பாடுகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. ஏற்றுமதியாளர்களுக்கு உதவுதல் மற்றும் முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற தவறான விடைகள் சில பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்டிருந்தன. பொருளியல் தொடர்பான புத்தகங்களை வாசிக்காமையால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை.

**(b)** சில பரீட்சார்த்திகள் மாத்திரமே நிதி இடையீட்டிற்கான கருத்தைச் சரியாக எழுதியிருந்தனர். ஏனையோர் நிதி இடையீட்டின் கருத்தைத் தவறாக விபரித்திருந்தனர்.

**(B)** **(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தேசிய கணக்குகள் எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்கு வழங்கப்பட்ட இவ்வினா பற்றிய எவ்வித புரிதலையும் கொண்டிராது விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட பெறுமானங்களைக் கூட்டியதன் மூலம் புள்ளிகளைப் பெற்றிருப்பினும் அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) இன் இறுதி விடைக்கு வந்திருக்கவில்லை.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) கணிப்பிட்டிருக்கவில்லை. சரியான விடையைச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே வழங்கி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) கணிப்பிடும்போது உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்களை கூட்டி பொருட்கள் மீதான வரியைக் கழித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் இந்தப் பாடப்பரப்பு தொடர்பான போதிய கோட்பாட்டு ரீதியான அறிவை கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**(C)** பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைபேறான அபிவிருத்தி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு இவ்வினா கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருளாதார அபிவிருத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தனராயினும், நிலைபேறான அபிவிருத்தி பற்றிய அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக பூரணமான விடையைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இதன் விளைவாக அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல்மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசித்ததன் பின்னர் குறிப்பான மற்றும் நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் நிரல் வினாத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாகவும் உரியவாறும் இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளை வாசிப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** பொருளியல் எண்ணக்கருக்களைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் சம்பந்தப்பட்ட அத்தகைய எண்ணக்கருக்கருக்கிடையேயான வேறுபாடுகளைக் கட்டமைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**(10)** நேரத்தைச் சரியானவாறு முகாமை செய்யவும்.

**(11)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -